SINCE 2013
We Shine Academy®
guiding you to get through
TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

# DAILY CURRENT AFFAIRS APRIL 29

| CONTENT | EXAM REMAINER | KINDLY JOINS |
|---|---|---|
| 1. National News<br>2. TN State News<br>3. PYQ CA Questions<br>4. PRACTICAL MCQ'S<br>5. REVISION | Group I- 06.09.2026<br>மீதம் 129 நாட்கள்<br><br>Group II & IIA- 25.10.2026<br>மீதம் 178 நாட்கள்<br><br>Group IV- 20.12.2026<br>மீதம் 235 நாட்கள் | https://t.me/weshinetnpscexams<br><br>https://chat.whatsapp.com/LBUXIXSof5046E3GWmFuTs?mode=gi_t |

Visit youtube link: https://youtube.com/live/zgl8naZnB00



Good morning officers,

"Every small improvement matters. P. V. Sindhu turned daily training into world-class performance."

"Success in exams is not luck—it's revision, practice, and patience."

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

# பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இரட்டை நிலைப்பாடு கூடாது

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் இந்தியா வலியுறுத்தல்

**புது தில்லி, ஏப்.28:** 'நாடுகளின் ஆதரவுடனான எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கவனத்தில் கொள்வதை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) தவறக் கூடாது. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இரட்டை நிலைப்பாடு கூடாது' என்று இந்தியா தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கேக்கில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற எஸ்சிஓ மாநாட்டில் பங்கேற்று பேசியபோது, எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் பாகிஸ்தானை நேரடியாகக் குறிப்பிட்டு, இக் கருத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார். மாநாட்டில் அவர் பேசியதாவது:

'நாடுகளின் ஆதரவுடனான எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கவனத்தில் கொள்வதில் நாம் தவறக் கூடாது. பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இரட்டை நிலைப்பாடு கூடாது.

தீவிரவாதம், அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதத்தால் தொடர் சவால்களை இந்தியா சந்தித்து வருகிறது. உலக ஒழுங்குக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக பயங்கரவாம் உருவெடுத்து வருகிறது. எனவே, பயங்கரவாதிகளுக்குப் புகலிடம் அளிக்கும் நாடுகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்துவதற்கு எஸ்சிஓ அமைப்பு தயங்கக் கூடாது என்றார்.

மேலும், தற்போதைய புவிசார் அரசியல் மாற்றங்கள் குறித்துப் பேசிய ராஜ்நாத் சிங், 'அதிகரித்து வரும் இன்றைய ஒருதலைப்பட்ச போக்கு மற்றும் மோதல்களால் உலகம் மிகப் பெரிய சோதனைகளை எதிர்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் நாடுகளுக்கு இடையேயான தீவிர மோதல்கள், கவலைக்குரிய வகையில் விலைமதிப்பற்ற உயிர்களையும், உடைமைகளையும் இழப்பதற்கு வழிவகுத்துள்ளது. இதைத் தடுக்க வேண்டிய அமைப்புகள் அல்லது நாடுகள், தங்களை

### சீன பாதுகாப்பு அமைச்சருடன் சந்திப்பு

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டின் ஒரு பகுதியாக, பிஷ்கேக்கில் சீன பாதுகாப்புத் துறை அமைச்சர் டோங் ஜுன்னை சந்தித்து ராஜ்நாத் சிங் ஆலோசனை மேற்கொண்டார்.

இதுகுறித்து தனது சமூக ஊடக பக்கத்தில் ராஜ்நாத் சிங் வெளியிட்ட பதிவில், 'எஸ்சிஓ நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தின்போது சீன பாதுகாப்பு அமைச்சர் டோங் ஜுன்னை சந்தித்து ஆலோ



# SCO
*Shanghai Cooperation Organisation*

**1996 Shanghai Five**

Kazakhstan, Tajikistan, Kyrgyzstan, Russia, China

**2001 Shanghai Five ⟶ SCO**

Uzbekistan was included.

Renamed as Shanghai Cooperation Organisation (SCO)

**2017 First Round of Expansion**

India and Pakistan Joined.

**2022 SCO Summit, Uzbekistan**

Varanasi was selected as the SCO region's 1st "Tourism and Cultural Capital" for 2022-23.

**2023 SCO Summit, India.**

India hosted the summit for the 1st time. It was held virtually.

Iran was included as SCO's 9th member.

SCO members agreed to explore using "national currencies" for payments within the grouping.

**2024 SCO Summit, Kazakhstan**

Belarus bacame the 10th member state of the SCO.

©PMF IAS

**An Eurasian intergovernmental organisation and economic and security alliance**




## Governance

**Main Focus**

- Regional Development
- Security Issues
  - Regional Terrorism
  - Ethnic Separatism
  - Religious Extremism

**Governed by** Heads of State Council (HSC), SCO's supreme decision-making body (Meet once a year)

**Official Languages:** Russian, Chinese

## Regional Anti-Terrorist Structure (RATS)

A **Permanent Organ** of the SCO

*Headquarters* Tashkent, Uzbekistan

Serves to promote cooperation of member states against the 3 evils

- Regional Terrorism
- Ethnic Separatism
- Religious Extremism

# அரசு மருத்துவ சேவையை நாடுவோர் விகிதம்: தென்னிந்தியாவில் தமிழகம் முதலிடம்

**சென்னை, ஏப். 28:** தென்னிந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறுவோர் விகிதம் அதிகமாக இருப்பதாக தேசிய புள்ளியியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஊரகப் பகுதிகளில் 47.5 சதவீதம் பேரும், நகர்ப்புறங்களில் 38.6 சதவீதம் பேரும் உள்நோயாளிகளாக அரசு மருத்துவமனைகளில் கடந்த ஓராண்டில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக அந்த விகிதம் 43-ஆக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாநிலங்களில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்றவர்கள் விகிதம்**

| | |
|---|---|
| தமிழ்நாடு | 43% |
| கேரளம் | 30% |
| கர்நாடகம் | 29.8% |
| தெலங்கானா | 29.3% |
| ஆந்திரம் | 26.9% |
| குஜராத் | 25.9% |
| மகாராஷ்டிரம் | 18.6% |

தனியார் மற்றும் அரசு மருத்துவ சேவைகளைப் பயன்படுத்துவோர் தொடர்பான தரவுகளை தேசிய புள்ளியியல் ஆய்வகம் மாநில வாரியாக அண்மையில் வெளியிட்டது.

அதில், அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சைப் பெறுவோரின் விவரங்கள் இடம்பெற்றுள்ளன. அதை ஒப்பீடு செய்யும்போது, ஆந்திரத்தில் 26.9 சதவீதம் பேரும், கேரளத்தில் 30 சதவீதம் பேரும், கர்நாடகத்தில் 29.8 சதவீதம் பேரும், தெலங்கானா 29.3 சதவீதம் பேரும், குஜராத்தில் 25.9 சதவீதம் பேரும், மகாராஷ்டிரத்தில் 18.6 சதவீதம் பேரும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

தென் மாநிலங்களைக் கருத்தில் கொண்டால், தமிழகம் முதலிடத்தில் உள்ளது. மாநில அரசு மேற்கொண்ட நலத் திட்டங்களின் காரணமாகவே இந்த விகிதம் உயர்ந்திருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

# ஆந்திரம்: ரூ.1.35 லட்சம் கோடியில் கூகுள் தரவு மையம்

## முதல்வர் சந்திரபாபு நாயுடு அடிக்கல்



ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூகுள் நிறுவன ஏஐ மையம் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்ற மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், முதல்வர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர்.

**தர்லுவாடா, ஏப்.28:** ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் அருகே ரூ.1.35 லட்சம் கோடியில் அமையவுள்ள கூகுள் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தரவு மையத்துக்கு அந்த மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு செவ்வாய்க்கிழமை அடிக்கல் நாட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கலந்து கொண்டார்.

தர்லுவாடா, அடவிவாரம் (விசாகப்பட்டினம்) மற்றும் ரம்பிலி (அனகாபள்ளி) ஆகிய கிராமங்களில் 600 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள 1 ஜிகாவாட் திறன் கொண்ட கூகுள் ஏஐ தரவு மையம் இந்திய எண்ம உள்கட்டமைப்புத் துறை வளர்ச்சியில் ஓர் மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

இதன் அடிக்கல் நாட்டு விழாவில் சந்திரபாபு நாயுடு பேசியதாவது: காலங்கள் கடந்து இந்திய மற்றும் ஆந்திர மக்களால் நினைவுகூரப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாக ஏப்.28, 2026 மாறியுள்ளது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு கூகுள் ஏஐ தரவு மையம் பெரும் பங்காற்றவுள்ளது.

இது சாதாரண தரவு மையம் அல்ல; நமது மாநிலத்தின் எண்ம எதிர்காலத்துக்கான அடித்தளம். ரூ.1.35 லட்சம் கோடியில் ஆசியாவில் மிகப்பெரும் தரவு மையமாக இது அமையவுள்ளது. உலகமே கூகுளில் தேடிக் கொண்டிருந்த போது ஆந்திரத்தை அந்நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. இதுவே நமது மாநிலத்தின் பெருமை.

**2028-இல் செயல்பாட்டுக்கு வரும்:** இந்த தரவு மையத்தை அமைப்பதற்கான முதல்கட்ட நடைமுறைகள் 2025, செப்டம்பர் மாதம் தொடங்கப்பட்ட நிலையில், பணிகள் முடிவடைந்த பின் 2028, செப்டம்பர் 28-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி இதை தொடங்கிவைக்கவுள்ளார். இதற்கான முழு ஒத்துழைப்பையும் ஆந்திர அரசு அளிக்கும் என உறுதியளிக்கிறேன்.

**ஏஐ மருத்துவர், ஏஐ உதவியாளர்:** ஒவ்வொரு குடிமகனுக்கும் ஒரு ஏஐ மருத்துவர், ஏஐ உதவியாளர் என ஏஐ தொழில்நுட்பம் நமது அன்றாடப் பணிகளுக்கு உதவும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பிரதமர் மோடியின் தொலைநோக்குப் பார்வைக்கு எனது பாராட்டுகள். இத்திட்டம் ஆந்திரத்துக்கு கிடைப்பதற்கு உறுதுணையாக இருந்த பிரதமர் மோடி, அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344
www.weshineacademy.com

**Ashok Lahiri, former Chief Economic Adviser (CEA) (Chief Economic Adviser), is set to be appointed Vice-Chairman of NITI Aayog, replacing Suman Bery.**

**முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகரான அசோக் லஹிரி, சுமன் பெரிக்குப் பதிலாக நிதி ஆயோக்கின் துணைத் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.**




**The Supreme Court of India has ruled that safe travel on National Highways is part of the Right to Life under Article 21.**

❖ **The Court stated that road safety is a constitutional duty of the State, not just an administrative issue.**

**தேசிய நெடுஞ்சாலைகளில் பாதுகாப்பான பயணம் என்பது, சட்டப்பிரிவின் 21-வது பிரிவின் கீழ் உள்ள வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதியாகும் என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

❖ **சாலைப் பாதுகாப்பு என்பது அரசின் அரசியலமைப்பு ரீதியான கடமையே தவிர, அது வெறும் நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.**




❖ **The Supreme Court of India allowed a 15-year-old minor to terminate her 31- week pregnancy.**

❖ **The Court held that reproductive autonomy is part of the Right to Life under Article 21.**

**❖ It stated that forcing a minor to continue an unwanted pregnancy violates dignity, privacy, and personal liberty.**

**❖ Though the Medical Termination of Pregnancy Act generally sets a 24-week limit, the Court allowed an exception in this case.**

❖ இந்திய உச்ச நீதிமன்றம், 15 வயது சிறுமி ஒருவர் தனது 31 வார கர்ப்பத்தைக் கலைக்க அனுமதி அளித்தது.

❖ சட்டப்பிரிவின் 21-வது பிரிவின் கீழ், இனப்பெருக்க சுயாட்சி என்பது வாழ்வதற்கான உரிமையின் ஒரு பகுதி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

❖ ஒரு சிறுமியை விரும்பத்தகாத கர்ப்பத்தைத் தொடரக் கட்டாயப்படுத்துவது கண்ணியம், தனியுரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மீறுவதாகும் என்று அது கூறியது.

❖ இந்தத் தீர்ப்பு, அந்தச் சிறுமியின் கடுமையான மன உளைச்சலையும், அவரது நல்வாழ்வுக்கு இருந்த ஆபத்தையும் கருத்தில் கொண்டது.

❖ மருத்துவ ரீதியான கர்ப்பக்கலைப்புச் சட்டம் பொதுவாக 24 வார வரம்பை நிர்ணயித்திருந்தாலும், இந்த வழக்கில் நீதிமன்றம் ஒரு விதிவிலக்கை அனுமதித்தது.




**Tamil Nadu has conducted the third synchronized survey of Nilgiri Tahr, a state animal, under Project Nilgiri Tahr.**

**A mobile application named "Varudai" is used for real-time data collection, GPS tracking, and reporting. ❖ Previous surveys recorded 1,031 Nilgiri Tahr in 2024 and 1,303 in 2025, showing population growth and habitat recolonisation.**

தமிழ்நாடு, மாநில விலங்கான நீலகிரி வரையாட்டின் மூன்றாவது ஒருங்கிணைந்த கணக்கெடுப்பை 'நீலகிரி வரையாடு திட்டம்' (Project Nilgiri Tahr) கீழ் நடத்தியுள்ளது.

நிகழ்நேரத் தரவு சேகரிப்பு, ஜிபிஎஸ் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதலுக்காக 'வருடை' (Varudai) என்ற மொபைல் செயலி பயன்படுத்தப்படுகிறது. ❖ முந்தைய கணக்கெடுப்புகளில், 2024-ல் 1,031 நீலகிரி வரையாடுகளும், 2025-ல் 1,303 வரையாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது அவற்றின் இனத்தொகை வளர்ச்சியையும், வாழ்விடங்களில் அவை மீண்டும் குடியேறுவதையும் காட்டுகிறது.



## Pichavaram Mangrove Ecosystem - Microplastic Contamination

❖ A recent study has reported high microplastic contamination in fish and shellfish in the Pichavaram mangrove ecosystem.

❖ Microplastic levels were highest during the monsoon season at about 45% due to heavy runoff carrying plastic waste into the area.

**பிச்சாவரம் சதுப்புநிலச் சூழல் மண்டலம் - நுண்பிளாஸ்டிக் மாசுபாடு**

❖ பிச்சாவரம் சதுப்புநிலச் சூழல் மண்டலத்தில் உள்ள மீன்கள் மற்றும் சிப்பிகளில் அதிக நுண்பிளாஸ்டிக் மாசுபாடு இருப்பதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

❖ இப்பகுதிக்குள் பிளாஸ்டிக் கழிவுகளை அடித்துச் செல்லும் அதிகப்படியான நீர் வழிந்தோடல் காரணமாக, பருவமழை காலத்தில் நுண்பிளாஸ்டிக் அளவு சுமார் 45% ஆக மிக அதிகமாக இருந்தது.







## Vibrant Village Programme:

❖ The scheme aims to improve infrastructure like roads, healthcare, education, electricity, and drinking water in these areas.

❖ It focuses on the last-mile delivery of welfare schemes and full coverage of eligible households.

**துடிப்பான கிராமத் திட்டம்:**

❖ இத்திட்டம், இப்பகுதிகளில் சாலைகள், சுகாதாரம், கல்வி, மின்சாரம் மற்றும் குடிநீர் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இது நலத்திட்டங்களை கடைநிலை வரை கொண்டு சேர்ப்பதிலும், தகுதியுள்ள குடும்பங்களுக்கு முழுமையான சேவையை வழங்குவதிலும் கவனம் செலுத்துகிறது.

